





We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## மார்ச் - 2019

*We Are Here..!! To Guide You..!!*







# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## மார்ச் - 03.03.2019

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்




- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- விருதுகள்
- முக்கிய தினங்கள்










## இந்திய நிகழ்வுகள்

- **வரி ஏய்ப்பு மற்றும் வரிதவிர்த்தலைக் கட்டுப்படுத்துவதற்காக**, வரி விதிப்புகளில் தகவல்கள் மற்றும் அதைச் சேகரிப்பதில் உதவி ஆகியவற்றின் பரிமாற்றத்திற்கான **புரிந்துணர்வு ஒப்பந்தமானது, இந்தியா மற்றும் புருனே** நாடுகளுக்கிடையே கையெழுத்தாகியுள்ளது.

- தமிழகத்தின் தலைமைத் தேர்தல் அதிகாரி **சத்ய பிரத சாஹூ,** 2019 பொதுத் தேர்தலுக்காக வடிவமைக்கப்பட்ட **நான்கு மொபைல் செயலியை** அறிவித்துள்ளார்.
  - **C – VIGIL** - தேர்தல் நன்னடத்தை விதிமீறல் குறித்த ஆதாரப்பூர்வமான தகவல் அளிப்பதற்காக.
  - **வாக்காளர் உதவிமையம்** (Voter’s Helpline) – வாக்காளர் பட்டியலில் தனது நிலையினை அறிவதற்காக.
  - **சுவிதா செயலி (Suvidha)** – தேர்தல் பணிகளுக்காக வேட்பாளர்களுக்கு பல்வேறு அனுமதிகளுக்காக இச்செயலி தொடங்கப்பட்டுள்ளது.
  - **PWD செயலி** – மாற்றுத் திறனாளிகளுக்கு வாக்காளர் அடையாளம் மற்றும் பதிவிடும் முறையை எளிதாக்குவதற்கு,

- **தண்ணீர் வீணாவதை தடுத்து** தண்ணீரைப் பாதுகாக்கும் முக்கியத்துவத்தை மக்களுக்கு உணர்த்துவதற்காக, **“ஜல் அம்ருதா”** (Jal Amrutha) என்ற திட்டத்தை **கர்நாடக அரசு** தொடங்கியுள்ளது.

## உலக நிகழ்வுகள்

- காந்தியின் 150-வது பிறந்த நாள் ஆண்டு விழாவைக் குறிப்பதற்காக, ஐக்கிய அரபு அமீரகத்தை சேர்ந்த நிறுவனம், **பூஜ்ஜிய மதிப்பிலான 12 வங்கிகளின், நினைவு ரூபாய் தாள்களின் வரிசையை, உலகம் முழுவதும் வெளியிட உள்ளது.**
  - காந்திக்கு அஞ்சலி செலுத்துவதற்காக, அவரின் அரசியல் வாழ்கையினை நினைவு கூறும் வகையில் அந்நோட்டில் அவரது புகைப்படம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

- ஏழாவது பிராந்திய விரிவான பொருளாதார கூட்டமைப்பு நாடுகளின்

அமைச்சர்கள் கூட்டம் - 2019 மார்ச் 2ஆம் தேதி **(RCEP Intersessional Ministerial Meeting)** உள்ள **சீம ரீப் பகுதியில் நடைபெற்றது.**

- இம்மாநாட்டில் இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் சுரேஷ் பிரபு கலந்து கொண்டார்.
- பிராந்திய விரிவான பொருளாதார கூட்டமைப்பு 2012 ல் தொடங்கப்பட்டது தற்போது அதில் 16 உறுப்பு நாடுகள் உள்ளன.

## அறிவியல் & தொழில்நுட்பம்

- **2019** ஆம் ஆண்டு மார்ச் மாதம் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்திற்காக **"எமிசாட்" எனப்படும் ஒரு மின்னணு உளவுத்துறை செயற்கைகோளை இஸ்ரோ அமைப்பு** விண்ணில் செலுத்த உள்ளது.

## விருதுகள்

- முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு முதலாவது **''P.V. நரசிம்மராவ் தேசிய தலைமை மற்றும் வாழ்நாள் சாதனை விருது"** முன்னாள் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியால் வழங்கப்பட்டது.

## முக்கிய தினங்கள்

- **பொதுக் கணக்கு தினம் (Civil Accounts Day 2019) – மார்ச்-01**
    - மார்ச் 01, 1976 அன்று புதுடெல்லியில் இந்திய சிவில் அக்கவுண்ட்ஸ் சர்விஸ் (ICAS) தொடங்கப்பட்டதன் நினைவாக ஆண்டுதோறும் மார்ச் 1 அன்று "பொதுக் கணக்கு தினம் (Civil Accounts Day) கடைபிடிக்கப்படுகிறது.